செய்தி வெளியீடு எண்: 999 நாள்:29.12.2020

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 28.12.2020 அன்று தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் சென்னை மாவட்டம் – வேப்பேரி மற்றும் திருவள்ளூர் மாவட்டம் – அயனம்பாக்கம் ஆகிய இடங்களில் 2 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பணிபுரியும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிருக்கான 2 விடுதிக் கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 27.8.2015 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், பணிபுரியும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர், தங்கள் பணி காரணமாக இருப்பிட மாவட்டங்களையும், குடும்பங்களையும் விட்டு பிற மாவட்டங்களுக்குச் சென்று தங்கி பணிபுரியும் போது பாதுகாப்புடனும், கவலையின்றியும், தங்கிப் பணிபுரிவதற்கு ஏதுவாக மகளிர் விடுதிகள் துவங்குவது அவசியமாகும். எனவே, முதற்கட்டமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் பணிபுரியும் மகளிருக்கான புதிய விடுதிகள் துவங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, முதற்கட்டமாக கடந்த 13.6.2019 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சி கன்டோன்மென்ட் பகுதியில் கட்டப்பட்ட பணிபுரியும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிருக்கான விடுதிக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக, சென்னை மாவட்டம் – வேப்பேரி மற்றும் திருவள்ளூர் மாவட்டம் – பூவிருந்தவல்லி வட்டம், அயனம்பாக்கம் ஆகிய இடங்களில் 2 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பணிபுரியும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிருக்கான 2 விடுதிக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். இவ்விடுதிக் கட்டடங்கள்

தலா 13 அறைகள், காப்பாளர் அறை, நவீன குளியலறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா.பென்ஜமின், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி. வி.எம். ராஜலெட்சுமி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் (பொறுப்பு) திரு. ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் திரு. ச. முனியநாதன், இ.ஆ.ப., தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் ஜெ. விஜயா ராணி, இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் திரு.வி.சி. ராகுல், இ.வ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 29.12.2020**